என். எஸ். கே. அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களும் மறக்க முடியாத கலைஞர்கள் ஆவார்கள். அவர்களுடைய நினைவாகவும் அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலும் அவர்களுடைய குடும்பத்தாரைப் பாதுகாக்கின்ற வகையிலும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த நிதி உதவி செய்கின்ற திட்டத்தின் அடிப்படையில்தான் கலைஞர் களுக்கு உதவி செய்து வருகிறது. பழம்பெரும் புகழ்வாய்ந்த கலைஞர்கள் பலர் நொடிந்த நிலையில் உள்ளவர்கள் இத்தகைய நிதி உதவியைப் பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அத்தகைய வர்களின் குடும்பத்தினருக்குத் தனி முயற்சி எடுக்க வேண்டுமே தவிர, இந்தத் திட்டத்தின்கீழ் வராது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, நடிகர்கள் பொதுவாக எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கிறார்கள். ஆனால் இத்தனை வயது வரை இன்ன இன்ன பாத்திரங்களில் நடிக்கலாம் என்ற உச்ச வரம்பை அரசு நிர்ணயிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி வரையறுக்க இயலாது. பார்க்கிறவர்களுடைய தன்மையையும் அவர்களுடைய கலைத் திறமையையும் பொறுத்திருக்கிறது.

## தென் இந்திய நடிகர் சங்கம்.

*472 வினா : திரு. என்.கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் இந்திய நடிகர் சங்கக் கட்டடம் கட்ட, தமிழ்நாடு அரசு, நிதி ஏதேனும் உதவ முன் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

## மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளி.

*473 வினா : திரு. என்.கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) அதில் அரசு மானியமாக வழங்கும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மாயூரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக ரூ. 4,10,000

செலவில் மதிப்பீடு ஒன்று தயாரித்து 1973-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒப்புதலுக்காகவும், அத்தொகையை அரசு மானியமாக வழங்குவதற்காகவும், அந்நகராட்சி ஆணையர் அனுப்பினார். ஆனால் அத்தொகை மிக அதிகமாக இருந்ததாலும், அவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நகராட்சி, மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட மொத்தமே ரூ. 1 லட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாலும், ரூ. 1 லட்சம் செலவுக்கு உட்பட்டவகையில் திருத்தப்பட்ட மதிப்பீடு ஒன்று அனுப்பி வைக்கும்படி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி, மதிப்பீடு அனுப்பி வைப்பதாக ஆணையர் கூறியுள்ளார்.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திருப்புவனத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

*474 வினா : திரு. த. சோணையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துவதற்கு அரசிடம் ரூ. 10,000 கொடுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கருத்து பரிசீலிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ந. வீராசாமி : சார், சப்ளிமெண்டரி கேள்விகளுக்கு வாய்ப்பளிக்க மறுக்கிறீர்களே........

திரு. கோவை செழியன் : சார், துணைக் கேள்வி கேட்க சான்ஸ் கொடுக்க மறுக்கிறீர்களே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்டு, பதில் அளித்து, அதற்கடுத்த கேள்வியைக் கேட்கும்போது, முதல் கேள்வியை எடுத்துக் கொள்வது முறை அல்ல.

திரு. பெ. சீனிவாசன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பார்வார்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் நடிப்புக்கு வயது வந்தவர்கள் நடிக்க வரம்பு வேண்டுமென்று கேட்டார்கள். இந்தப் பேரவையில் உறுப்பினராக உள்ள எங்கள் கட்சித் தலைவரை மறைமுகமாகக் கூறுகின்ற முறையில் முதலமைச்சரானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேச தாங்கள் அனுமதிப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். தாங்கள் தயவு செய்து அத்தகைய